(ஆ) குளித்தலையில் பேருந்து நிலையம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " குளித்தலை பேரூராட்சியில் பேருந்து நிலையம் நெடுநாள் கட்டப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

குளித்தலைப் பேரூராட்சியில் கடம்பர் கோயில், லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மற்றும் நீலமேகப் பெருமாள் கோயில் ஆகிய மூன்று கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் 2.89 ஏக்கர் பரப்பளவில் பேருந்து நிலையம் ரூ. 120.00 லட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நான்கு கட்டங்களில் செயல்படுத்தும் திட்டம் பேரூராட்சிகள் இயக்குநருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிகள் இயக்குநர் இத்திட்டத்தின் முன்மொழிவினை நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பியுள்ளார்.

ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பேருந்து நிலையம் கட்ட தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு மிகவும் அதிகமாக உள்ளதாகவும், ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பேருந்து நிலையம் கட்ட கொடுக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை ரூ. 30.00 லட்சம் மட்டுமே என்பதாகவும், கூடுதல் நகர் ஊரமைப்பு இயக்குநர் தெரிவித்துள்ளார். கூடுதல் இயக்குநர் (நகர் ஊரமைப்பு) கருத்திற்கிணங்க பேரூராட்சி குறைந்தபட்ச செலவில் பேருந்து நிலையம் கட்டத் தேவையான கருத்துருவினை நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் உதவியுடன் தயார் செய்து, அதிலிருந்து நடைமுறையில் கிடைக்கக்கூடிய ஆண்டு வருமானத்தைக் குறிப்பிட்டு திருத்திய கருத்துரு அனுப்பி வைக்க குளித்தலைப் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் உதவியுடன் தயாரிக்கப்பட்ட திருத்திய கருத்துரு விரைவில் பெறப்பட்டு ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குளித்தலை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும்பணி துவக்கப்படும்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். குளித்தலை என்பது ஒரு நகராட்சிக்குத் தகுதி உள்ள நகரம். சுதந்திரம் அடைந்து 45 ஆண்டுகளாகி, இதுபோன்ற 30,000 மக்கட்தொகை கொண்ட நகரத்திற்குப் பேருந்து இல்லாத ஊரே இல்லை என்று தமிழ்நாட்டிலே கூறலாம். இருந்தும், நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் கட்டப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன. இது கோயில் நிலம் என்று அமைச்சர் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கோயில் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா? அப்படிக் கையகப்படுத்தப்பட்டிருந்தால் தானே கட்ட முடியும். அது கோயில் நிலம், இதுவரையில் கையகப்படுத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். கையகப்படுத்துவதற்குரிய முயற்சிகள் எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியில் இந்த பஸ் நிலையம் கட்டப்படுகின்ற பணி தாமதப்பட்டிருப்பதற்குக் காரணம் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒரு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டுகின்ற திட்டமாக, சுமார் ரூ.1.20 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நான்கு கட்டங்களில் கட்டுவதற்காக மதிப்பீடுகள் வழங்கப்பட்டிருந்தன. மாவட்ட ஆட்சித் தலைவரும் பேரூராட்சிகள் இயக்குநருக்கு அந்த மதிப்பீட்டின் முன்மொழிவினை அனுப்பி, இன்றைக்கு அந்த முன்மொழிவு நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்தப் பேரூராட்சியைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன்தொகையாக ரூ.30 இலட்சத்திற்கு மேல் கொடுக்கமுடியாது. ஆகவே ரூ.1.20 கோடி என்பது அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், இந்த திருத்திய மதிப்பீடு, அதிகபட்சக் கடன்தொகை, ஆகியவற்றைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, இன்றைக்கு அந்தப் பேருந்து நிலையம் கட்டுவதற்கான தேவையான அத்தனை கருத்துருவும் மீண்டும் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், திருச்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் உதவியுடன் தயாரிக்கப்பட்ட திருத்திய கருத்துரு விரைவிலே பெறப்பட்டு, குளித்தலை பேரூராட்சிக்குப் பேருந்து நிலையம்

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 22

அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இன்றைக்கு அந்த நிலம் கையகப்படுத்தப்படுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இதுசம்பந்தமாக மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் என்னுடத்திலே அணுகி நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்தும் இதுபற்றி அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களும் இன்றைக்கு இந்து ரிலீஜியஸ் என்டோமென்ட் போர்டிலிருந்து அந்த நிலம் நமக்கு எடுத்துக்கொள்வதற்கான உத்தரவை விரைவில் பெற்றுத் தருவோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதிலே எந்த விதமான சிரமமும் இல்லை. விரைவில் பணிகளைத் துவங்குவதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் நெருக்கடியான இடத்தில் பஸ்கள் நின்று கொண்டிருக்கின்றன. ஆகவே அது மக்களுக்கு அதிக சிரமமாக இருக்கிறது. அந்த 3 கோயில்களின் நிலத்தையும் கையகப்படுத்தி, நகர்ப்புற வளர்ச்சித் துறையிலிருந்து பணம் சற்று தாமதமானாலும் கூட, அந்த லேண்ட் உரிமையைப் பெற்று, அந்த இடத்திலேயே பஸ்கள் நிற்க உடனடியாக அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ? அத்தோடு 30 லட்சம் என்பதை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த பஸ் ஸ்டான்ட் கட்டினால் திரும்ப ரி-பேயிங் கெப்பாசிட்டி இருக்குமா என்றும் ஆராய வேண்டும். ஏனென்றால் நிலத்திற்கும் பேரூராட்சி பணம் கட்ட வேண்டும். அந்த அடிப்படையிலே இந்தப் பணம் போதுமா என்றும் பரிசிலிக்க வேண்டும். அப்படி முடியாது என்று சொன்னால் 30 லட்சத்தையாவது உடனடியாக வாங்கி அந்த இடத்திலே பேருந்தை நிறுத்துவதற்கு வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டு, செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் நிலையம் கட்டாமலேயே அங்கு பஸ்கள் நிறுத்தப்படும் என்ற கேள்விக்கு இடமே இல்லை. காரணம்,அந்த புரப்போஸ்டு பஸ் ஸ்டான்டிலே, பேருந்துகளை பஸ் நிலையம் கட்டாமலேயே அனுமதித்துவிட்டோம் என்று சொன்னால் நிறைய பிராக்டிகல் சிக்கல்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருப்பதனால் அது முடியாது. இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிற அந்த 30 லட்சம் ரூபாயே அந்த பேருந்து நிலையம் கட்டுவதற்குப் போதுமானதாக இருக்கிறது என்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அதற்கு உண்டான அத்துணை நடவடிக்கைகளும் அதி விரைவிலே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS